| මගේ අංකය / எனது இல / My No | ඔබේ අංකය / உமது இல / Your No | දිනය / திகதி / Date |
|---|---|---|
| DSD/HO/14/SS/VIII/1/2020 | ........................................... | 2020.09.28 |

**சமுர்த்தி திணைக்கள சுற்றறிக்கை (சமூக பாதுகாப்பு) இலக்கம் 2020/10**

சகல மாவட்ட செயலாளர்கள்/ மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதிகள்
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்,
சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமைாளர்கள் ஆகியோருக்கும்

**<u>சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியத்தின் கீழ் சமுர்த்தி “சிப்தொர” புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தினை செயற்படுத்துதல்</u>**

மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் 2020/2022 கல்வியாண்டிற்குறியதாக சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசில் வேலைத்திட்டம் இவ்வாண்டில் செயற்படுத்தப்படவுள்ளது. 2020/2022 கல்வியாண்டிலிருந்து சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களின் க.பொ.த. உ/தரத்தில் கல்வி கற்கத் தகுதியினைப் பெறும் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்களுக்கு இப் புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

**02. நோக்கம்:-**

2.1) நிதியியல் கஷ்டங்கள் காரணமாக சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களில் திறமை மற்றும் தகுதிகள் உள்ள பிள்ளைகள் உயர் கல்வியிலிருந்து விலகிச் செல்வததைத் தவிர்த்து அவர்களது எதிர்கால கல்வியினைப் பாதுகாத்தல் மற்றும் உயர்கல்வியினைப் பெறுவதற்கான வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தினை விரிவுபடுத்துதல்.




1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන) / மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்) / Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

2.2) சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களின் சிறார்களின் பொருட்டு சிறந்த சமூக பொருளாதார, சூழல் ஒன்றினைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கு உதவுவதன் ஊடாக சமூகத்திற்கு பயனுள்ள பிரஜைகளை நாட்டில் உருவாக்குவதும், நாட்டின் அபிவிருத்திக்கு அவர்களது பங்கேற்பினை அதிகமதிகமாக பெற்றுக் கொள்ளலும்.

**03. தேவையான தகமைகள்:-**

3.1) சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பம் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

3.2) 2019 ஆம் ஆண்டில் முதன் முறையாக க.பொ.த (சா/த) பரீட்சையில் தோன்றி 2020 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ/த) கல்வி கற்பதற்கு தகுதியினைப் பெற்று பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர் ஒருவராக இருத்தல். பாடசாலை அதிபரின் உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3.3) குறித்த பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் ஒருவராக இருத்தல்.

**04. புலமைப்பரிசில் பெறுவோரை விளக்கமளித்தல் / மற்றும் விண்ணப்பத்தினைப் பொறுப்பேற்றல்.**

4.1) இந்த சிப்தொர புலமைப்பரிசில் வேலைத்திட்டம் தொடர்பில் குறித்த பிரிவில் வதியும் சகல நிவாரணம் பெறுவோரையும் விளக்கமளிப்பது : அறிவித்தல்கள், கூட்டங்கள் போன்றவை ஊடாக பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் நேரடிப் பொறுப்பாகும். கடந்தாண்டில் தலைமைக் காரியாலயத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளுக்கு அமைய சகல சமுர்த்திப் பயனாளிகளுக்கும் விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை என்பது தெளிவாகியிருந்தது.

4.2) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள 01 ஆம் இலக்கப்படிவத்திற்கமைய தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை விண்ணப்பதாரியால் உறியபிரகாரம் பூர்த்தி செய்து 2020.10.15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

5. **புலமைப்பரிசில் பெறுவோரின் பெயர்ப்பட்டியல் மற்றும் பொழிப்பறிக்கையினை அனுப்புதல்.**

5.1) பிரிவிற்கேற்ப புலமைப்பரிசில் பெறுபவரின் பெயர்ப்பட்டியலை இணைப்பு 02 இன் பிரகாரம் பூர்த்தி செய்து 2020.10.26ம் திகதிக்கு முன்னர் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

5.2) மேலே 5.1 இன் பிரகாரம் தங்களது மாவட்டத்திற்குறிய சகல புலமைப்பரிசில் பெறுவோரின் பெயர்ப் பட்டியலை பிரதேச செயலகப் பிரிவிற்கமைய இணைப்பு இலக்கம் 03 இன் பிரகாரமும் விண்ணப்பதாரிகள் தொடர்பான சுருக்கப்படுத்தப்பட்ட அறிக்கையினை இணைப்பு இலக்கம் 04 இன் பிரகாரமும் பூர்த்தி செய்து மாவட்டப் பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் தலைமைக் காரியாலயத்தின் சமூக பாதுகாப்பு மற்றும் அங்கீகாரத்துடன் தலைமைக் காரியாலத்தின் சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரி பிரிவிற்கு 2021.11.05ம் திகதிக்கு முன்னர் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டியதுடன் யுனிகோர்ட் பயன்பாட்டுடன் ssfsamurdhi@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்குக் கிடைக்க ஆவணசெய்தல் வேண்டும். (தமிழ் மொழி மூலம் - Unicode – Kalaham - MS office excel)

**06. செயற்படுத்தப்படும் விதம்**

6.1) புலமைப்பரிசில் கொடுப்பனவினை வழங்கும் போது சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் புலமைப்பரிசுகளைப் பெறுபவரின் பெயரில் சிசுறக்க கணக்கொன்றினை ஆரம்பித்து தவணைப்பணத்தினை வங்கிக் கணக்கில் வைப்பிலிடல் வேண்டும். (வாழ்வின் எழுச்சி சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றறிக்கை 2016/05)

6.2) புலமைப்பரிசில் தொகையினை வங்கிக்கணக்கில் வரவிட்ட உடனேயே அது பற்றி புலமைப்பரிசில் பெறுபவருக்கு அறிவிக்கச் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

6.3) புலமைப்பரிசில் தொகையினை வங்கியிலிடுகின்ற சந்தர்ப்பத்திலேயே குறித்த மாணவரின் உரித்துப் படிவத்தில் பணம் செலுத்திய திகதியினை பிழையின்றி பதிவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

6.4) படிவம் 05 இன் பிரகாரம் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் புலமைப்பரிசில் பெறுவோர் தொடர்பில் பட்டியல் ஒன்றினை பராமரித்துச் செல்லல் வேண்டும்.

**07. புலமைப்பரிசில் கொடுப்பனவும் காலமும்:-**

7.1) மாதாந்த கொடுப்பனவானது ரூபா 1,500/ ஆகும் என்பதுடன் அதில் பாடசாலை விடுமுறைக் காலமும் உள்ளடங்களாக க.பொ.த (உ/த) கற்கும் மாணவர்களுக்கு இரு வருடங்களுக்கு (24 மாதங்கள்) வழங்கப்படும். புலமைப்பரிசில் கொடுப்பனவின் போது புலமைப்பரிசிலைப் பெறுவருக்கு வழங்கப்படுகின்ற ஆவணங்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் புலமைப்பரிசில் தொகையினை வழங்க வேண்டியதுடன் அதன் பின்னர் சமூக பாதுகாப்பு நிதியக்கணக்கிலிருந்து பணத்தைச் செலுத்தி ஒவ்வொரு மாதமும் ஈடுசெய்து கொள்ளல் வேண்டும்.

7.2) சிப்தொர புலமைப்பரிசிலின் பொருட்டு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள், தொடர்பில் பாடசாலை அதிபரின் சிபார்சினை மாதாந்தம் பெற்றுக் கொள்வதில், ஏதேனும் காரணத்தினடிப்படையில் முடியாவிடின் மாத்திரம் குறித்த மாணவர் பாடசாலை செல்கின்றதனை சமுர்த்தி உத்தியோகத்தரின் மூலம் சிபாரிசினைப் பெற்றுக்கொண்டு கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் வேண்டும். இருப்பினும் 06 மாதங்களுக்கொருமுறை கட்டாயமாக பாடசாலை அதிபரின் சிபாரிசினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். 2020 – 2022 கல்வியாண்டிலிருந்து இது அமுல்படுத்தப்படும்.

7.3) இப்புலமைப்பரிசில் கொடுப்பனவு எக்காரணம் கொண்டும் குறைக்கப்படலாகாது என்பதுடன் தாமதப்படுத்தலுமாகாது.

7.4) பிற அரசாங்க அல்லது தனியார் மாணவர் உதவித் தொகைகள் அல்லது உதவிப்பணங்களைப் பெற்றுக் கொள்ளும் பயனாளிக் குடும்பங்களின் மாணவர்களுக்கும் இந்த மாணவர் உதவித் தொகையின் பொருட்டு விண்ணப்பிக்க உரிமையுண்டு (2016 க.பொ.க (சா/தர) பரீட்சையின் பின்னர் இது உரித்துடையதாகும்.)

**08. செயலற்றுப் போதல்.:-**

8.1) புலமைப்பரிசிலைப் பெறுபவர் பாடசாலைக் கல்வியினை விட்டுச் செல்லல்.

8.2) புலமைப்பரிசிலைப் பெறுபவரின் பாடசாலை வரவு, நடத்தைகள், மற்றும் கற்றல் நடவடிக்கைகள் திருப்திகரமற்ற சந்தர்ப்பங்களின் போது.

8.3) புலமைப்பரிசினைப் பெறுவோர் திருமணமாகின்ற பட்சத்தில்.

8.4) புலமைப்பரிசைப் பெறுவோர் இறக்கும் பட்சத்தில்.

8.5. சமுர்த்தி நிவாரணத்தை இழக்கும் பட்சத்தில்

சிப்தொர புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தின் வெற்றியின் பொருட்டு தாங்கள் உட்பட பணியாளர்கள் வழங்கும் ஒத்துழைப்பினை போற்றி மதிக்கிறேன்.

ஆர்.பீ.பி. திலக்கசிறி
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

1. செயலாளர் - சமுர்த்தி மனைப் பொருளாதாரம், நுண்நிதி, சுயதொழில், தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் குறைப்பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு - த.கூ.க. பொருட்டு
2. செயலாளர் - கல்வி அமைச்சு - த.கூ.க. பொருட்டு
   (புலமைப் பரிசில் பெறுவோர்களின் பெயர்ப்பட்டிலை பின்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்)
3. பிரதம கணக்காளர், மாவட்டச் செயலகம் - த.கூ.க.பொருட்டும், உ.ந பொருட்டும்.
4. சகல பிரிவுத் தலைவர்கள் - த.கூ.க.பொருட்டும். உ.ந பொருட்டும்.

TRANSLATED BY – M.M.M. JAWHAR (Translator)